JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.115/2021
PW.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணன் | தாலுகா | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | ராமசாமி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | மாவடிக்கால் | வயது | 51 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 26.05.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது மாவடிக்காலில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி ராமர் என்பவரை எனக்கு தெரியும். அவருக்கு விபத்து ஏற்பட்டு அவருடைய காலை எடுத்துள்ளார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 5,6 வருடங்களுக்கு முனபு நான் எனது சொந்த வேலையாக காவல் நிலையம் சென்ற போது போலிசார் கேட்டு கொண்டதால் அந்த கையொப்பத்தை போட்டேன். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அசாஆ 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 13.02.2019 ம் தேதியன்று 14.00 மணிக்கு நானும், சாட்சி ராமர் என்பவரும் வழக்கின் சம்பவ இடம் அருகே பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த கடையநல்லூர் காவல் உதவி ஆய்வாளர் கடையநல்லூர் காவல்நிலைய குற்ற எண் 48/2019 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், ராமர் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளை

இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi